# சுனன் அர்ராதிபா
(சுன்னத் தொழுகையின் சிறப்புகள்)

எல்லாப் புகளும் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸலாத்தும், ஸலாமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நிலவட்டுமாக.

மறுமை நாளில் அடியானிடம் முதன்மையாக விசாரனை செய்யப்படுவது தொழுகையைப் பற்றியாகும். அதை அந்த அடியான் பூரணமாக நிறைவேற்றியிருந்தால்,, பூரணமாக நன்மை எழுதப்படும். அது பூரணம் பெறவில்லை என்றால்,, எனது அடியானின் சுன்னத்தான தொழுகையைப்பாருங்கள் அதைக் கொண்டு அவனின் பர்ழான தொழுகையை நிரப்புங்கள் என்று அல்லாஹ் வானவர்களைப் பார்த்துக் கூறுகிறான். என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(ஆதாரம் அஹ்மத்)

## சுனன் அர்ராதிபா (சுன்னத்தான தொழுகையின்) சிறப்பு

ஒரு அடியானான முஸ்லிம் ஒவ்வொரு நாளும் இறைவனுக்காக பர்ழான தொழுகை அல்லாமல் மேலதிகமாக 12 ரக்அத்துகள் தொழுது வந்தால் அவனுக்காக இறைவன் சுவனத்தில் ஒரு வீட்டை கட்டுகிறான். என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(ஆதாரம் முஸ்லிம்)

## புஜ்ர் தொழுகையின் சுன்னத்

பஜ்ர் தொழுகையின் இரு ரக்அத்துகள் உலகமும் அதில் உள்ளவற்றையை விடவும் சிறந்ததாகும். என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

இன்னும் ஆயிஷா (ரலி) அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் பஜ்ர் சுன்னத்துகள் இரண்டு ரக்அத்துகள் மீது காட்டும் அக்கரை முக்கியத்துவத்தை விட வேறு எந்த நபிலான தொழுகைக்கும் காட்டியதில்லை.

## லுஹர் மஃரிப் இஷாவின் சுன்னத்

நபி (ஸல்) அவர்கள் லுஹர் தொழுகைக்கு முன்பு நான்கு ரக்அத்துகள் எனது வீட்டில் தொழுதுவந்தார்கள். பின்பு வெளிச் சென்று மக்களை தொழுவிப்பார்கள். அதன் பின் வீட்டில் நுழைந்து இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். இன்னும் மஃரிப் தொழுகையையும் தொழுவித்து விட்டு இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். இஷாவையும் தொழுவித்த பின்பு எனது வீட்டில் நுழைந்து இரண்டு ரக்அத்துகள் தொழுதுவந்தார்கள். என ஆயிஷா (ரலி) அன்ஹா அறிவிக்கிறார்கள்.

(ஆதாரம் முஸ்லிம்)

## ஜுமுஆவின் சுன்னத்

உங்களில் ஒருவர் ஜுமுஆத் தொழுது விட்டால், அதன் பிறகு (பள்ளியில்) நான்கு ரக்அத்துகள் தொழுது கொள்ளட்டும். என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் (ஆதாரம் முஸ்லிம்)
இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆ முடிந்ததும் வெளியாகிச் செல்லும் வரை தொழமாட்டார்கள் பின்பு அவர்களின் வீட்டில் இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள்.
(ஆதாரம் முஹ்லிம்)

## சுன்னத்தான தொழுகையில் அதிகத்தை நாடினால்,,

*அஸ்ர் தொழுகைக்கு முன் நான்கு ரக்அத்துகள் தொழுபவருக்கு அல்லாஹ் அருள் செய்கிறான் என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (ஆதாரம் அபூதாவுத், திர்மதி)

*மேலும் நபியவர்கள் கூறினார்கள்: யார் லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகளும், அதற்குப் பின் நான்கு ரக்அத்துகளையும் பேனிக் கொள்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் நரகத்தை ஹராமாக்கிவிட்டான். (ஆதாரம் அபூதாவுத், திர்மதி)

*இன்னும் ஒவ்வொரு அதானுக்கும் இகாமத்துக்குமிடையில் தொழுகையுண்டு. ஒவ்வொரு அதானுக்கும் இகாமத்துக்குமிடையில் தொழுகையுண்டு. ஒவ்வொரு அதானுக்கும் இகாமத்துக்குமிடையில் தொழுகையுண்டு. மூன்றாவது தடவை நாடியவருக்கு என நபியவர்கள் கூறினார்கள்.

## வுழூவின் இரண்டு ரக்அத்துககள் சுன்னத்தாகின்றன

நபியவர்கள் பிலால் (ரழி)யவர்களிடம் பிலாலே! நீர் இஸ்லாத்தில் செய்த உமக்கு விருப்பத்துக்குரிய செயலைப் பற்றி சொல்வாயாக. ஏனெனில் நான் சுவனத்தில் என் முன் உன் பாதணிகளின் சப்தத்தை செயியுற்றேன் என்றார்கள். அதற்கு பிலால் நான் இரவிலோ பகலிலோ வுழூச் செய்து அந்த வுழூவுடன் என்ககு (அல்லாஹ்) ஏற்படுத்தப்பட்டதை தொழுவதை விட நான் எனக்கு விருப்பத்துக்குரிய எந்த அமலையும் செய்யவில்லை. (ஆதாரம் புஹாரி முஸ்லிம்)

## லுஹா வித்ர் தொழுகையின் சிறப்பு

எனக்கு என் தோழர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பதையும், இரண்டு ரக்அத்தை லுஹாத் தொழுகையையும், நான் தூங்கு முன் வித்ர் தொழுமாறும் உபதேசித்தார்கள். என அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி முஸ்லிம்)

இரவின் பிற்பகுதியில் விழித் தொழுவதற்கு தன்னால் இயலாது எனக்காண்பவருக்கே, தூங்கும் முன் வித்ர் தொழுவது சுன்னத்தாகும். அப்படி இயலும் எனக் கண்டவருக்கு இரவின் பிற்பகுதிலே சிறந்ததாகும்.

நபியவர்கள் கூறினார்கள்: கடமையாக்கப்பட்ட தொழுகைக்குப் பிறகு வித்ர் தொழுகை சிறந்ததாகும். (முஸ்லிம்)

ஆயிஷா (ரழி) அன்ஹா கூறுகிறார்கள்: நபியவர்கள் தன் பாதங்கள் காயமாகும் வரை இராத் தொழுவார்கள். அப்போது நான் அல்லாஹ்வின் தூதரே! முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நீங்கள் இப்படி செய்ய வேண்டாம் என நான் அவர்களுக்கு கூறுவேன். அதற்கு அவர்கள் நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா எனக் கூறுவார்கள்.

(புஹாரி முஸ்லிம்)

தமிழில்: மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)